# Dina Ithazh

# தினஇதழ்

# 15/03/2018

# Page # 06

சென்னையில்

## சூர்யோதய் சிறுநிதி வங்கியின் முதல் கிளை திறப்பு

சென்னை, மார்ச் 15 – முன்னாள் வங்கியாளர்களை பங்காளர்களாகக் கொண்ட சூர்யோதய் சிறுநிதி வங்கியானது தனது முதல் கிளையை சென்னையில் நேற்று வங்கியின் முதன்மை செயல் அலுவலர் பாஸ்கர் பாபு திறந்து வைத்தார்.

முதல் வங்கி கிளையை துவங்கி வைத்து பின் அவர் கூறியதாவது, முன்னாள் வங்கியாளர்களுடன் இணைந்து அவர்களது பங்காண்மைக்கும், தொழில்முனைவுத் தன்மைக்கும் ஊக்கம் அளிக்கும் வகையில் பங்காண்மையர் வங்கியின் முதல் கிளையை சென்னையில் துவங்கியுள்ளோம். வலிமையான ஆளுமை, வெளிப்படைத் தன்மை, வாடிக்கையாளர்களுக்கான உயர்தர சேவை அனுபவம் இவையே வங்கியின் முக்கிய குறிக்கோளாகும்.

இதில் முன்னாள் வங்கியாளர்கள் பங்காளர்களாக இணைந்து இருப்பதால் வாடிக்கையாளரின் தேவைகளை புரிந்து வைத்திருப்பார்கள். எனவே, அவர்களிடமிருந்து புதிய ஐடியாக்களைப் பெற்று வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சேவையினை வழங்க உள்ளோம். தனித்துவமிக்க வணிக முன்மாதிரியாக அமைவதால் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று நாங்கள் எதிர்பார்கின்றோம்.

வாடிக்கையாளர்களுடனான எங்களுடைய உறவை வலுபடுத்தி கடன் பெறும் நிலையிலிருந்து அவர்களை சொத்து உருவாக்குநர்களாக வளர்த்தெடுப்பதற்கு உரிய செயல்திட்டத்தை மேற்கொள்ள விரும்புகிறோம். என்று கூறினார். 2018–ம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டு முடிவில் ரூ.500 கோடிக்கும் மேற்பட்ட வைப்புத் தொகை இருந்தது. வங்கியின் வளர்ச்சி வீதம் 37 சதவீதம் உள்ளது என்றார்.